Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, COURT, ANNUR

Case No.C.C.No. 475/2023

Deposition of witness for Prosecution P.W. 4 Date : 30.04.2025

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு. ஆனந்த் ஆரோக்கியராஜ் | Village : | |
| Father's Name : | சலைத் | Taluk : | |
| Age : | 52 | Religion : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30th day of April 2025 (Accused Present)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை.**

நான் தற்போது திருச்சி மாநகர உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2014ம் ஆண்டில் அன்னூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக நான் பணிபுரிந்து வந்த சமயத்தில் கடந்த 02.02.2014–ம் தேதி மணிகண்டன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று காவல் உதவி ஆய்வாளர் திருமதி.சுகன்யா என்பவர் முதல் தகவல் அறிக்கை எண். 41/2014, சட்டப்பிரிவுகள் 279, 337, 304–A இ.த.ச. –வின் கீழ் பதிவு செய்துள்ளார். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் அன்றைய தினமே நான் இந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் பழனிச்சாமி, செல்வன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ. 3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை அவர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பின்னர் இறந்து போன சுரேஷ் என்பவர் பிரேதத்தின் மீது சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை நடத்தி அறிக்கை தயார் செய்தேன். **(அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இவ்வழக்கு விபத்தில் தொடர்புடைய TN 66 C 2365 மற்றும் TN 38 AE 8906 ஆகிய இரண்டு வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.சித்ரா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை பெற்றேன். **(அந்த இரண்டு வாகனங்களின் ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன சுரேஷ் என்பவரது உடலை உடற்கூராய்வு செய்த மருத்துவர் திரு.பட்டீஸ்வரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து உடற்கூராய்வு சான்று பெற்றேன். **(அந்த உடற்கூராய்வு சான்று அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு விபத்தில் காயம்பட்ட பழனிச்சாமி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.வேலாயுதம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றேன் **(அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இவ்வழக்கின் எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்து, பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளரை

விசாரித்து வழக்கின் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக 279, 337, 304–A இ.த.ச –வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கின் புகார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையானவர்கள் இறந்து போன நபரின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்து போன நபர் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து வந்த நபர் என்றால் தவறு, சுரேஷ் என்பவர் தான் ஓட்டுநர். வழக்கு இறந்து போன நபர் சுரேஷ் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்று நான் வாக்குமூலம் பெற்றுள்ளேனா அல்லது ஆவணங்கள் ஏதேனும் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. மோட்டார் வாகன ஆய்வறிக்கை சம்பவ இடத்தில் வைத்து செய்யவில்லை என்றால் சரிதான். 11 நாட்கள் கால தாமத்தோடு தான் இந்த வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். உடற்கூராய்வு செய்த மருத்துவர் இறந்து போன நபரது உள்ளுறுப்புகள் அனைத்தும் பகுப்பாய்விற்கு கொடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அவ்வாறு குறிப்புகள் எதுவும் உடற்கூராய்வு அறிக்கையில் இல்லை. மருத்துவரை விசாரித்த போது இறந்து போன நபர் மது அருந்தியிருந்ததாக எந்த வாக்குமூலமும் நான் மருத்துவரிடம் இருந்து பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் பசூர் என்ற இடம் சத்தியமங்கலம் செல்லும் சாலை என்றால் சரிதான். அந்த சம்பவம் நடைபெற்றதாக கூறும் இடத்தில் வழக்கமாக பயணம் செய்யும் நபர்கள் யாரையும் நான் கண்ணுற்ற சாட்சிகளாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். பகல் நேரத்தில் சைகை விளக்குகள் எறிவது தெரிய வாய்ப்பு இல்லை என்று சொன்னால் தவறு. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் தொடர்பில்லை என்றும் நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. எதிரியின் அதிவேகமான அஜாக்கிரதையான செயல் எதுவும் இவ்வழக்கு விபத்திற்கு காரணமில்லை என்று சொன்னால் தவறு.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.
(ஒப்பம்) திருமதி.வெ.மோனிகா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், அன்னூர்.